உயிர் பறிக்கும் தாய்மை

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்று எல்லாவற்றிலும் இலண்டனில் இலங்கைத் தமிழ் பெண்மணி இரு பிள்ளைகளை வெட்டிக் கொன்று விட்டதான செய்தியை பரப்பரப்பாக அலசப்படுகிறது.. ஆறு மாதச் சிசு வெட்டுக் காயத்தோடு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறது.

ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும், இங்கு அப்படி ஒரு அவலம். தொடர் வேலைப்பளு, பொருளாதார அழுத்தம் என்பன தாயாரின் மன நிலையைப் பாதித்து விட்டதாக ஒரு கணிப்பு. இலங்கைத் தமிழர் என்ற முத்திரைக்குள் இப்படியும் ஒரு அழிக்க முடியாத அவப்பதிவு.

ஊரிலும் காலாகாலமாக இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுத்தான் இருக்கின்றன. அழிக்க முடியாத காலப்பதிவுகளாக அவை இன்றும் காவப்படுகின்றன. 'ஏழு பிள்ளை நல்ல தங்காள்' என்பது அறுபது ஆண்டு களுக்கு முன்பு நடந்த சம்பவம் நாடகமாகவும் புகழ் பெற் றது. தன் ஏழு பிள்ளைகளை கிணற்றில் வீசிக் கொலை செய்யும் தாயை மையப்படுத்தும் சம்பவம் நாடகமாக ஊர் ஊராக மேடை ஏற்றப்பட்டும் புகழ் படைத்தது.

வடமராச்சி அல்வாய் பகுதியிலும் ஒரு சம்பவம். இருபது ஆண்டுகளுக்கு மேலான நிகழ்வு. நித்தம் கள்ளுக்குடிக்கும் இடத்தில் ஒரு குடும்பஸ்தருக்கு குடி பானத்தில் ஏதோ கலக்கப்பட்டு விட்டதாகவும் அதனால் அவருக்கு என்ன செய்கிறார் என்பதை அறியாத ஒரு நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. வீடு சென்ற வர் தன் இரு மூத்த ஆண் பிள்ளைகளையும் வெட்டிக் கொலை செய்துவிட்டார். தடுக்க வந்த மனைவிக்கும் கையில் வெட்டு. குற்றவாளியாக அவர் காணப்பட்டு சிறைவாசம் அனுபவித்த அவர் மீள வந்து தன் மனைவியோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து பின்னர் இரு பிள்ளைகளுக்கு தந்தையானார்.

1970 களில் தெல்லிப்பழை பன்னாலை கிராமத்தில் நடந்த ஒரு நிகழ்வில் வயது வந்த ஐந்து இளம் சகோ தரிகள் உயிரை மாய்த்துக் கொள்ள ஒன்றாக கிணற்றில் குதித்த பரிதாபச் சம்பவம். ஒருவர் மட்டும் காப்பாற்றப்பட நான்கு சகோதரிகள் முயற்சி பலித்து பலியானார்கள். தந்தைக்கும் தாய்க்குமான தொடர் வாக்குவாதம் சண்டை என்பன கொடுத்த மன அழுத்தம்.

அயல் பங்குக் கிணற்றுக்காரரோடு அடிக்கடி நடக்கும் காணி எல்லைச் சண்டை. அந்த இளம் சகோதரிகள் திட்ட மிட்டு இரவு ஒன்பது மணிக்கு ஒன்றாக ஐவரும் கிணற் றில் குதித்து உயிரை மாய்த்துக் கொள்ளும் முடிவுக்கு வரக் காரணமானது. கிணற்றில் குதித்து பிணமானாலும் தங்கள் ஆடை தங்களோடு ஒட்டி இருக்க வேண்டும் என்ப தற்காக ஐவரும் தங்கள் அரைப் பாவாடையை காலோடு இறுக்கி சட்டைப்பின் குத்தியிருந்தார்கள். இறப்பதில் அப்படி அழுத்தமான ஒரு முடிவு. 21 வயதுமுதல் 13 வயது வரையான ஐந்து சகோதரிகளில் இறந்துபோன நான்கு உடல்களும் ஒன்றாக அடுக்கப்பட்டிருந்த காட்சி மறக்க முடியாத பரிதாபம். இங்கும் கூட ஓயாது சத்தம் போட்டு சண்டை செய்யும் தாய்தான் பிள்ளைகள் இந்த முடிவை எடுக்கக் காரணம் என்று சொல்லப்பட்டது.

1960களில் நடந்த மற்றும் ஒரு சம்பவம் கோகிலாம்பாள் கொலை வழக்கு என புகழ் பெற்றது. கிளிநொச்சி உருத்திர புரத்தில் நடந்த நிகழ்வு. கணவன் காசிலிங்க சர்மா என்ற பிள்ளையார் கோயில் ஐயரை மனைவி கோகிலாம் பாள் தன் கள்ளக்காதலன் உட்பட இன்னும் வேலையாளர் களான இருவருடன் சேர்ந்து கழுத்தை அறுத்துக் கொலை செய்த பரிதாபம். 'மாட்டு ஐயர்' என்ற பெயரில் நெடுந் தீவில் பகழ் பெற்ற ஐயரின் மகன் காசிலிங்கம் சர்மா மந்திரம் கற்க இந்தியா சென்று அங்கேயே கோகிலாம் பாளை திருமணம் செய்து அழைத்து வந்தார். உருத்திர புரம் 10ஆம் வாயக்கால் 1960இல் அபிவிருத்தி கண்ட ஒரு குடியேற்றத்திட்டம். 'ஆலயம்' இல்லாத ஊருக்கு 'அழகு பாழ்' என்று அரசாங்க உதவியோடு காணி ஒதுக்கப்பட்டு உருத்திரபுரம் பிள்ளையார் கோயில் எழுப்பப்பட்டது. பூசகர் நிலையாக குடியிருக்க ஐயர் குடும்பத்தினருக்கும் ஒரு வீடு 4 ஏக்கர் நெற் செய்கைக் காணி வழங்கப்பட்டது. கோயிலை ஊராரின் வேண்டுகோளுக்காக ஆரம்பித்து வைத்த 'மாட்டு ஐயர்' தன் மகன் குடும்பத்தை பொறுப் பாக்கிவிட்டு நெடுந்தீவு திரும்பி விட்டார். காசிலிங்கசர்மா, கோகிலாம்பாள் திருமண வாழ்வில் நாலு பிள்ளைகள்.

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

சம்பவம் நடக்கும்போது மூத்த பெண்ணுக்கு 13 வயது. வேலுப்பிள்ளை என்ற உதவியாளரோடு கோகிலாம் பாளுக்கு ஏற்பட்ட காதல் தொடர்பு ஐயரை கொலை செய்யும் முடிவுக்கு கொண்டு சென்றது. கொலை திட்டப் படி பிணத்தை தாழ்க்க வீதிக்கு அப்பால் எள்ளுக்காடு என்ற பற்றைப் புறத்தில் புதை குழியும் வெட்டப்பட்டது. நடு நிசி நேரம் வெளியே விறாந்தையில் படுத்திருந்த ஐயரின் தலை, கள்ளக்காதலன் வேலுப்பிள்ளை, இன்னொரு உதவியாளர் பசுபதி என இருவராலும் வெட்டி கொய்யப்பட்டது. குறி தவறாமல் வெட்ட கோகிலாம்பாள் விளக்கு பிடித்து ஒத்துழைத்தார். பிணத்தைப் புதை குழிக்கு கொண்டு செல்லும் முயற்சியில் ஒரு தடங்கல். ஒரு உருவம் அடிக்கடி வந்து தம்மை தடுத்ததாக பின் அரச சாடசியாக மாறிய பசுபதி நீதிமன்றத்தில் தெரிவித்தார். விடியும்வரை முயற்சி பலிக்காததால் வீட்டு முற்றத்தில் இருந்த எருக் கும்பலில் சாக்கில் கட்டிய ஐயரின் பிணம் புதைக்கப்பட்டது. விடிய விறாந்தையைக் கழுவி கொண்டிருந்த தாயிடம் மூத்த மகள் என்ன இரத்தம் எனக் கேட்டபோதும் அது எனக்கு சுகமில்லை என்றுதான் தாயார் கூறினார். எங்கே ஐயர் என்ற கேள்விக்கும் அதிகாலை பஸ்ஸில் நெடுந்தீவு போய்விட்டதாகப்பதில். நாளாக, ஐயர் தேடப்படத்தான் எருவுக்குள் இருப்பதாக தன் மகள் கனவில் வந்து தனக்கு சொன்னதாக மாட்டு ஐயர் உருத்திரபுரம் வந்து சொல்ல ஊரார் எருவைத் தோண்ட அழுகிய சாக்கில் உடல் வெளிப்பட்டது. ஊரே ஒன்று கூடியது. நாறி ஊனம் வடியும் பிணச்சாக்கை குற்றவாளியான வேலுப்பிள்ளை, பசுபதி ஆகியோரின் தலையில் சுமக்க வைத்து அந்த ஆறடி உயர பொலிஸ் அதிகாரி இழுத்துச் செல்ல ஊர் கல் எறிந்து திட்டியது. நீதிமன்றத் தீர்ப்பில் கோகிலாம்பாள், வேலுப்பிள்ளை இருவருக்கும் ஆயுட்தண்டனை. மூத்த மகளும், அரச தரப்பு சாட்சியாக மாறிய பசுபதியும் சொன்ன சாட்சியம் குற்றவாளிகள் இனங்காணப்பட காரணமானது.

இதில் ஆச்சரியப்படக்கூடிய விடயம் உண்டு. பதினாறு ஆண்டு சிறைவாசம் முடிய, கோகிலாம்பாள் விடுதலை பெற, அவளை அழைத்துச் செல்ல ஆதரிக்க யாரும் இல்லை. மாட்டு ஐயர்தான் தன் மகனைக் கொன்ற மருமகளை அழைத்துச் சென்று ஆதரித்தார். இதற்காக கோயில் பூசை உரிமையை ஊர் தன்னிடம் இருந்து பறித்ததையும் மாட்டு ஐயர் பொருட்படுத்தவில்லை.

ஒரு சில மணிநேர மனக் கொதிப்பு உளைச்சல். என்ன செய்கிறேன் என்று தெரியாமலே சென்ற வெள்ளி இரவு பிரித்தானியா வாழ்வில் அந்த 35 வயது தமிழ்த்தாய்க்கு இரு பிள்ளைகளை கொல்ல வைத்தது. உடனே 999ஐ அழுத்தி பிள்ளைகளை காப்பாற்ற முயன்றதும் அதே தாய்தான். இவ்வாறான அவலங்கள் காலப் பதிவுகளில் மனித குலத்தில் இடம் பெறத்தான் செய்கின்றன. இந்தச் சீமையில் இதற்கு பரிகாரம் காண, மனவள நிலையங்கள் அமைக்க, தமிழ் அமைப்புகள் முன்வருமா?

அறிவியல் தகவல்கள்

சி.மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)

உயிர் வளி ஏற்றம்

உயிர்வளி ஏற்றம் என்றால் ஒக்சி ஏற்றம் அல்லது பிராணவாயு ஏற்றம். என்ன செய்வது தமிழ் சொற்களுக்குக்கூட அர்த்தம் சொல்லாவிடில் புரியாத சூழல்.

எம் உடலில் 60 இலட்சம் கோடி வரையான உயிர்க் கலங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிற்கும் உயிர்வளி தேவை. அது இல்லையேல் அவற்றின் செயற்பாடும் இல்லை. உடற் செயற்பாடுகளின்போது பக்க விளைவாக ஒரு எலக்ரோனை இழந்த மூலக் கூறோ அல்லது மேலதிகமாக ஒரு உயிர்வளி மூலக் கூற்றை வலுகுறைந்த நிலையில் சேர்த்து வைத்திருக்கும் ஹைறஜன் பெறக்ஸ்சைட் (H_2O_2) போன்ற பொருட்கள் உருவாகின்றன. சில சமயங்களில் நுண் உயிர்களைக் கட்டுப்படுத்த உடலே இப்படியான பொருட்களை உருவாக்குவதும் உண்டு. புகைத்தல், வளிமண்டலம் மாசு படிதல் போன்ற காரணங்களாலும் இப்படியான ஆபத்தை விளைவிக்கும் பொருட்கள் உருவாகலாம். ஏன்ன நடந்தாலும் இப்படி உருவாகும் வேற்றுப் பொருட்களை உடல்கட்டுமானம் தன் எதிர்ப்பு சக்தியினால் சமன் செய்து விடும்.

எம் உடலினுள் இவற்றை சமநிலைப் படுத்தும் பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் சூழலின்போதுதான் பிரச்சினையே உருவாகின்றது. அந்தச் சூழலில்தான் நாம் தேவையான அளவு உயிர்வளி ஏற்ற எதிர்ப்பிகள் கொண்ட உணவை உட்கொள்ள வேண்டும். இந்த உயிர்வளி ஏற்ற எதிர்ப்பிகள் பற்றி 100 ஆண்டுகளுக்கு முன் நாட்டு வைத்தியர்கள் அறிந்திருந்த அளவுகூட மேற்குலகம் அறிந்திராத காரணத்தால் அவர்கள் அவை பற்றி பெரிதாகக் கவனம் செலுத்தவில்லை.

உயிர்வளி ஏற்றம் அல்லது ஒக்சி ஏற்றம் என்றால் உலோகங்கள் துருப்பிடித்தலைக் குறிக்கும் ஒரு பதமாகவே அர்த்தம் கொள்ளப்பட்டது. ஒரு நூற்றாண்டுக்கு உள்தான் உயிர்சத்து ஏ, ஈ, சீ போன்ற பொருட்கள் சிறந்த உயிர்வளி ஏற்ற எதிர்ப்பிகள் என்பது கண்டறியப்பட்டது.

போதியளவு உயிர்வளி ஏற்ற எதிர்ப்பிகள் உடலில் எமது உணவுடன் செல்லாவிடில் புற்று நோய், இருதய நோய், இளமை முதுமை போன்ற கோளாறுகள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகரிக்கும்.

உணவுடன் போதிய அளவு பழங்கள், இலைவகைகள், மரக்கறிவகைகள் சேர்க்கப்பட வேண்?ம். நாம் நாளாந்தம் உபயோகிக்கும் இஞ்சி, உள்ளி, போன்றவை பல்வகையான உயிர்வளி ஏற்ற எதிர்ப்பிகள் கொண்டவை. உள்ளி மட்டும் 15 வகையான உயிர்வளி ஏற்ற எதிர்ப்பிகளை உள்ளடக்கியுள்ளது.

எமது உடல் நலனுடன் பின்னிப் பிணைந்திருக்கும் உயிர்வளி ஏற்ற எதிர்ப்பிகள் பற்றி நாம் மேலும் மேலும் அறியவேண்டும். இதற்கான மருத்துவ ஆலோசனையை இந்த விடயத்தில் தவறாது பெற்றுக் கொள்ள வேண்டும்.

மனித நேயம்

இருக்கவோ ? எழவோ?
இருக்கையின் நுனியில் .... மனப்போராட்டம் !
பெரியவரின் தள்ளாமை ... தர்மசங்கடப்படுத்துகிறது !
இருக்கவோ ? எழவோ?
எழுந்துவிட தீர்மானித்தேன் இரக்கத்திற்காக அல்ல ..
இறக்கத்திற்காக !
எனது நிறுத்தத்திலேயே ... மனிதநேயமும் இறங்கிப்போனது!

- ரசிகவ் ஞானியார்

IRO
Immigration – குடிவரவு

கடந்த 11 ஆண்டுகளாக பிரித்தானியாவில் குடிவரவுத் துறையில் முன்னணி நிறுவனம்

விபரங்கட்கு: **திரு குலேந்திரன்**
திரு ராம்
திரு சூரியகுமாரன்

Tel: **020 8682 4494**
Mob: **07976 759 725**
07939 261 540
07810 848 017

OISC

உங்கள் சகல விதமான

- குடிவரவு விண்ணப்பங்கள்
- மேன்முறையீடுகள் (Appeals)
- இலங்கை, இந்தியாவில் விசா மறுக்கப்பட்டவர்களுக்கான மேன்முறையீடுகள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்

இது தவிர

- Human Rights - Humanitarian Protection, 10 years - 14 years விண்ணப்பங்கள்,
- புதிய அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் (Fresh Application)

முன் அனுமதி பெற்று வரவும். அலுவலக நேரம்
11.00 – 17:30 திங்கள் முதல் வெள்ளி

1083 Garratt Lane, Tooting, London, SW17 0LN

(குடிவரவு ஆணையாளர் அலுவலகத்தினால் குடிவரவு ஆலோசனைகள் வழங்க Level 3 அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனம்.)